[1979 நவம்பர் 3

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, சூறிச்சி பேரூராட்சி ஒன்றியத்தில் இந்தத் திட்டத்தினால் பலன் பெறும் மக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அதைப்போல், 1980 ஆம் ஆண்டு நிறைவேற்றப்படும் என்று சொல்லுகின்ற காரணத்தினால். அந்தப் பகுதியில் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. அதை விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு என்னிடம் தகவல் இல்லை. விரைவில் வேலை தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். மிக விரைவில் வேலை தொடங்க ஏற்பாடு செய்கிறேன்.

திரு க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் துவங்கப்படுகின்ற கிராம பஞ்சாயத்துக்கள் எந்தெந்த பஞ்சாயத்துகள் என்பதை அறிவிப்பதானால், அது நீண்ட பட்டியலாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகளை அவை உறுப்பினர்களுக்கு அனுப்பினால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அனுப்பி வைக்கிறேன்.

திரு ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கக்கூடிய நேரத்திலே. 15 டவுன் பஞ்சாயத்துக்களுக்கும், 5 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். இத்திட்டத்திற்குள் சின்னவேடம்பட்டி நகர பஞ்சாயத்தும், சிரவணம்பட்டி நகர பஞ்சாயத்தும் உள்ளடங்கி இருக்கிறதா? உள்ளடங்கி இல்லையென்றால், அது உள்ளடங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அனுப்பி வைக்கின்ற பட்டியலில் திட்டம் உள்ளடங்கி இருக்கின்றதா, இல்லையா என்பதைப் பார்த்து, இல்லையென்றால் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தர்மபுரி மாவட்டத்தில் பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கல்.

*வினா எண் 154—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நீலகிரி மாவட்டம் போல் தருமபுரி மாவட்டத்தின் போக்குவரத்து வழித்தடங்கள் முழுவதையும் அரசே ஏற்க ஏதேனும் செயல்திட்டம் உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் ஒப்பந்த பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் மீது டெல்லி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்..

1979 நவம்பர் 8]

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மேலும் சிறப்படைய நாட்டுமக்கள் மேலும் நலம் பெற, நாட்டு உடமையாக்கப்படும் திடடத்தின் அடிப்படையில் தர்மபுரி மாவட்டம் முழுமையாக கிராமம், நகரம் என்ற பாகுபாடு நீங்கி, வறட்சி மாவட்டம் வளம்பெற மேலும் இதைப்பற்றி மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, முழுமையாக் நாட்டு உடைமையாக்குகின்ற திட்டம் அரசின் கொள்கையாக இருந்தாலும், அது இப்போது உச்ச நீதி மன்றத்தில் இருக்கின்ற காரணத்தினால், அதனுடைய தீர்ப்பின் அடிப்படையில் இநத அரசினுடைய நாட்டு உடைமை யாக்க வேண்டும் என்ற எண்ணமும் நிறைவேற அது ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி—சேலம் விரைவுப் பேருந்துப்பணி.

* வினா எண். 155—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேனிலிருந்து சேலத்துக்கு விரைவுப் பேருந்து விடும் செயற் குறிப்பு உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தேனி வழியாக சேலத்திலிருந்து கம்பத்திற்கு ஒரு விரைவு பேருந்தினை இயக்க பல்லவன் போக்கு வரத்துக்கழகம் உத்தேசித்துள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் விரைவுப் பேருந்து, கம்பம் வரை இப்போது ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த வசதியினை பெங்களூர் வரை நீட்டித்து தரவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.